தினமணி

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 24 May 2012 01:13:19 PM IST

தருமபுரி, மே 23: தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (மே 25) நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் ஆட்சியர் ஆர். லில்லி தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

வேளாண்மைத் துறை, பொறியியல் துறை, தோட்டக் கலைத் துறை, ஆவின், கால்நடைத் துறை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதில், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், கூலித் தொழிலாளர்கள் கலந்து கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம்.

கடந்த மாதக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பதில் அளிக்கப்படும்.

இந்தக் கூட்டத்துடன், வேளாண் சார்புடைய இதர ஆலோசனைக் கூட்டமும் நடைபெறும்.

## உணவுப் பொருள்கள் தயாரிப்பு குறித்து இலவசப் பயிற்சி

First Published : 24 May 2012 01:13:42 PM IST

தருமபுரி, மே 23: தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், உணவுப் பொருள்கள் தயாரிப்பு குறித்த இலவசப் பயிற்சி முகாம் தருமபுரியில் 26-ம் தேதி (சனிக்கிழமை) நடைபெறுகிறது.

மத்திய அரசு உதவியுடன் இயங்கி வரும் தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் மூலம், நிறுவன வளாகத்தில் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. காளான் வளர்த்தல், காளான் பொருள்கள் தயாரிப்பு, பேக்கரி பொருள்கள், பழப் பொருள்கள், பயறு பொருள்கள், பால் பொருள்கள், காய்கறி பொருள்கள், மிட்டாய் வகைகள், ஆடு, கோழி இறைச்சிப் பொருள்கள் தயாரித்தல் மற்றும் அனைத்து வகையான உணவுப் பொருள்கள் தயாரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

மேலும், இத்தகைய தொழில்கள் தொடங்க உதவிகளும், கடன் வசதி, மானிய உதவி, மத்திய, மாநில அரசு உதவிகள், மின் வசதி பெற்றுத் தரப்படும். ஊக்கத் தொகை, இடம் தேர்வு, இயந்திரங்கள் தேர்வு,

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## வரத்து அதிகரிப்பால் தேங்காய் எண்ணெய் விலை சரிவு

மே 25,2012,00:34



கொச்சி:நடப்பு பருவத்தில், தென் மாநிலங்களில், கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், இதன் விலை, 10 - 15 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.தமிழகம்:தமிழகம், கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில், நடப்பு பருவத்தில், தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, கேரளாவில் தேங்காய் வரத்து, பிப்ரவரி மாதம் முதற்கொண்டு அதிகரிக்கும்.

அதேசமயம், தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களில், மார்ச் முதல் ஜூன் வரையிலான காலத்தில், தேங்காய் வரத்து அதிகரித்து காணப்படும்.கடந்த 2010-11ம் பருவத்தில், பருவ நிலை சாதகமாக இல்லாததால், தேங்காய் உற்பத்தி, அதற்கு முந்தைய ஆண்டை விட, 10 - 15 சதவீதம் குறைந்திருந்தது. குறிப்பாக, கேரளாவில் சென்ற ஆண்டு, தேங்காய் உற்பத்தி, 50 சதவீதம்

குறைந்திருந்தது. இதனால், கடந்த 2011ம் ஆண்டு மே மாதத்தில், கொச்சி சந்தையில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, அதிகபட்சமாக 105 ரூபாய் வரை சென்றது.

தற்போது, கொச்சி சந்தையில், ஒரு குவிண்டால் தேங்காய் எண்ணெய், 6,050 ரூபாய்க்கும், காங்கேயத்திலிருந்து, கொச்சி சந்தைக்கு அனுப்பப்படும், ஒரு குவிண்டால் தேங்காய் எண்ணெய் விலை, 5,800 ரூபாய் என்றளவிலும் உள்ளதாக, வேளாண் சந்தைப்படுத்தும் மையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயன்பாடு:உள்நாட்டில், தேங்காய் எண்ணெய் பயன்பாடு நன்கு உள்ளது. அதேசமயம், இதன் வரத்தும் அதிகரித்துள்ளது. எனவே, ஒரு குவிண்டால் @தங்கா# எண்ணெ# விலை 5,500 - 5,600 ரூபாய் என்றளவிற்கு குறைய வாய்ப்புள்ளது என, தேங்காய் எண்ணெய் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போதைய நிலையில், சில்லரை விற்பனையில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 65 ரூபாய் என்றளவில் உள்ளது.

மற்ற சமையல் எண்ணெய் விலைகளுடன் ஒப்பிடும் போது, தேங்காய் எண்ணெய் விலை குறைவாக உள்ளது. மத்திய அரசு, உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், தேங்காய் எண்ணெய் விலை மேலும் சரிவடையும். இதனால், விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என, கொச்சியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

## தோட்டக்கலை விளை பொருட்களுக்கு பரிசு

பதிவு செய்த நாள் : மே 25,2012,04:47 IST

ஏற்காடு: "ஏற்காட்டில் நடக்கும், 37வது கோடை விழா மலர் கண்காட்சியில் கலந்து கொள்ளும் சிறந்த தோட்டக்கலை விளை பொருட்களுக்கு பரிசு வழங்கப்படும்' என, தோட்டக் கலைத்துறை துணை இயக்குனர் இன்பராஜ் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ஏற்காட்டில் நடக்கும், 37வது கோடை விழா மலர் கண்காட்சியில், காய்கறி, பழக்கண்காட்சி சிறப்பாக நடத்த தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. பழம், காய்கறி கண்காட்சிகளில், விவசாயிகள், தங்கள் வயலில் சாகுபடி செய்துள்ள தோட்டக் கலை விளை பொருட்களான காய்கறிகள், பழங்களை காட்சியில் வைக்க தோட்டக் கலைத்துறை ஏற்பாடு செய்துள்ளது.இதில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு, சான்றுகழ் வழங்கப்படும். போட்டியில் பங்கேற்க விரும்பும், சேலம் மாவட்ட விவசாயிகள், தங்களின் சிறந்த தோட்டக்கலை விளை பொருட்களை, சேலம் தோட்டக் கலைத்துறை துணை அலுவலகத்திலோ, ஏற்காடு மலர் கண்காட்சி திடலிலோ பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும். இதில் வெற்றி பெறும் விவசாயிகளுக்கு, மே27ல் நடக்கும் நிறைவு விழாவில் பரிசு, சான்றிதழ் வழங்கப்படும். மேலும், விபரங்களுக்கு, சேலம் செரிரோட்டில் உள்ள தோட்டக் கலைத்துறை துணை இயக்குனர்

அலுவலகத்திலோ, அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களையோ அணுகி விபரம் தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு "கிசான் கார்டு'கலெக்டர் உத்தரவு

பதிவு செய்த நாள் : மே 25,2012,00:52 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் திண்டுக்கல்லில் நடந்தது.வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், கலெக்டரின் ÷ நர்முக உதவியாளர் கார்த்திகேயன், தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகர், பொதுப்பணித்துறை நிர்வாக பொறியாளர் சந்திரசேகர், அதிகாரிகள் பங்கேற்றனர்.

விவாதம் வருமாறு:ராஜாமணி, கோதைமங்கலம்: விவசாய தேவைகளுக்கு மண், வண்டல் மண் எடுப்பதற்கு அனுமதி கேட்டால் தாமதப்படுத்துகின்றனர்.

கலெக்டர்: விவசாயிகளுக்கு முன்னுரிமை தர கனிம வளத்துறையினருக்கு உத்தரவிடலாம். இனி, இந்த பிரச்னையும் வராது. லட்சுமணன், ஒண்டிபொம்மன்பட்டி: தேனீ வளர்ப்பு குறித்து விபரம் தேவை. எந்த அலுவலகத்தை அணுகினால் தகவல் கிடைக்கும். திகாரிகள்:

## ராமநாதபுரத்தில் ஆவின் பால் உற்பத்தி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மே 25,2012,02:26 IST

கருத்தை பதிவு செய்ய

எல்லாம் இலவச மாடுகளின் கறவை மயம் ராமநாதபுரம்:விலையில்லா கறவை மாடுகளின் கறவை மயத்தால், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆவின் பால் உற்பத்தி 13 ஆயிரம் லிட்டரை தாண்டியுள்ளது.

வறண்ட மாவட்டமான ராமநாதபுரத்தில், தீவன பற்றாக்குறையால் தினமும் 5,000 லிட்டருக்கு குறைவாகவே, பால் உற்பத்தி இருந்து வந்தது. போதிய அளவில் ஆவின்பால் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். இதை பயன்படுத்திக் கொண்ட தனியார் நிறுவனங்கள் தங்கள் விற்பனையை அதிகரித்தன.இந்நிலையில் அரசு சார்பில் விலையில்லா கறவை மாடுகள் திட்டம் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு சொசைட்டி இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டன. கடந்தாண்டு முதுகுளத்தூர், கமுதி, கடலாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் 700 பசு மாடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பாண்டில் இதுவரை 196

கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை தினமும் குறைந்தது 8 முதல் 10 லிட்டர் வரை பால் சுரக்கின்றன. மொத்தமாக தினம் 2,500 லிட்டர் பால் கிடைக்கிறது. இதனால் உற்பத்தி 13 ஆயிரத்தை தாண்டியுள்ளது. கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர், குமரகுரு கூறியபோது: ஆந்திராவில் இருந்து வாங்கப்பட்டஇந்த மாடுகளுக்கு, "ஆவின்' மூலம் "கோ-4' என்ற புல் வழங்கப்படுகிறது. விவசாயிகளை ஊக்கப்படுத்த, புல் வளர்ப்பிற்க்காக மானியம் வழங்கி வருகிறோம். இதுவே உற்பத்தி அதிகரிப்பிற்கு காரணம், என்றார்.
ஆவின் பொது மேலாளர், கிறிஸ்டோபர் கூறியதாவது: கடந்த சில மாதங்களாக உற்பத்தி அதிகரித்து கடந்த மாதம் 47 ஆயிரமாக இருந்தது, தற்போது வரை 48 ஆயிரம் லிட்டராக பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. சில மாதங்களில் 50 ஆயிரத்தை தாண்டிவிடும். இரு மாவட்ட வாடிக்கையாளர்களின் தேவை போக உபரி பால், தினமும் மதுரை ஆவினுக்கு அனுப்பப்படுகிறது, என்றார்.

---

## *சர்க்கரை ஏற்றுமதிக்கான உச்சவரம்பு உயர்த்தப்படும்?*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2011–12 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) 20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது. எனினும் சர்க்கரை உற்பத்தி அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு மேலும் ஐந்து லட்சம் டன் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.*
*மே 11–ந் தேதியன்று அளவின் அடிப்படையில் எவ்வித கட்டுப்பாடுமின்றி சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. எனினும் எவ்வளவு சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதை கண்காணிக்கும் வகையில் ஏற்றுமதி ஆர்டர் குறித்த விபரங்களை தன்னிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் சர்க்கரை ஆலைகளைக் கேட்டுக் கொண்டுள்ளது. சர்க்கரை ஏற்றுமதி 20 லட்சம் டன் என்ற அளவை எட்டியதும் கூடுதல் ஏற்றுமதி குறித்து ஆய்வு செய்யப்படும்.*
*கடந்த 2010–11 பருவத்தில் 2.43 கோடி டன் சர்க்கரை உற்பத்தி ஆகியுள்ளது. நடப்பு பருவத்தில் இது 2.52 கோடி டன்னாக உயரும் என அரசு மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதே சமயம் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் 2.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பீடு செய்துள்ளது. நம் நாட்டில் ஆண்டுக்கு 2.20 கோடி டன் சர்க்கரைதான் தேவைப்படுகிறது. எனவே ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.*

## குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 100 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், மே.25–

குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் 100 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது.

டீசர்வ் ஏலம்

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் வாரந்தோறும் புதன்கிழமை குன்னூர் டீசர்வ் ஏல மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

விற்பனை எண் 21–க்கான ஏலம் கடந்த 23–ந் தேதி நடை பெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 3 லட்சத்து 55 ஆயிரத்து 427 கிலோ வந்தது. இதில் 2 லட்சத்து 15 ஆயிரத்து 941 கிலோ இலை ரகமாகவும், 1 லட்சத்து 40 ஆயிரத்து 486 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

100 சதவீதம் விற்பனை

ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண் டனர். இதனால் 100 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது. விற்பனை அதிகரித் ததால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.3 முதல் ரூ.5 வரை விலை உயர்வு ஏற்பட் டது.

சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.67 முதல் ரூ.72 வரையிலும் ஏலம் சென்றது.

விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.78–ல் இருந்து ரூ.85 வரை யிலும், டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.72–ல் இருந்து ரூ.77 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.82–ல் இருந்து ரூ.87 வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 22–க்கான ஏலம் வருகிற 30–ந்தேதி நடைபெற உள்ளது.